[1994 ஏப்ரல் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 447, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

447—

கோவை குறிச்சி, பெரியகுளம் ஊர்களில் குட்டைகளைத் தூர் எடுத்து ஆழப்படுத்துதல்

** 9163*—திரு. கே. செல்வராஜ்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை குறிச்சி, பெரியகுளம் ஆகிய ஊர்களில் உள்ள குட்டைகளைத் தூர் எடுத்து ஆழப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கோவை குறிச்சி, பெரியகுளம் ஆகிய ஊர்களில் உள்ள குட்டைகளை தூர் எடுத்து ஆழப்படுத்தும் திட்டம் இல்லை என்று அறிவித்தார்கள். இந்தக் குறிச்சிக் குளமும், பெரியகுளத்திற்கு சுமார் சங்கிலித் தொடர் போல் 8 குளங்களிலிருந்து மழை காலங்களில் அதிக நீர் வர இருக்கிறது. இந்தக் குளங்கள்தான் கோவை மாநகரப் பகுதிக்கு மட்டும் சுமார் 20 கிலோமீட்டர் சுற்றளவிற்கு கிணறுகளுக்கும், ஆழ்குழாய் கிணறுகளுக்கும் நீர் வரத்து ஏற்படுத்திக் கொடுக்கின்ற குளங்களாக இருக்கின்ற காரணத்தினால் இந்தக் குளங்களைத் தூர் எடுத்து, அணைக்கட்டு போல் சுவர்கள் அமைத்து சிறந்தமுறையில் பராமரித்தால், ஆண்டுக்கணக்காக அந்தப் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினை வராமல் இருக்கும். அதற்காக மாண்புமிகு அமைச்சரவர்கள் மீண்டும் பரிசீலித்து முடிவு எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குளங்களைப் பொறுத்தமட்டில் ஏற்கெனவே கூட ஆக்கிரமிப்புகள் எல்லாம் அதிகமாக இருக்கின்றன என்ற புகார் வந்திருக்கின்றது. அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொதுவாக இந்தக் குளங்களில் பெருமழை பெய்தால்தான் வெள்ளம் ஏற்படும் காலங்களிலேதான் இந்தக் குளங்கள் பெருகுகின்ற நிலை ஏற்படுகின்றது. ஆகவே தொடர்ந்து இந்தக் குளங்களுக்கு தண்ணீர் வரத்து

1994 ஏப்ரல் 29]

குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே நம்முடைய அதிகாரிகள் தற்போது அந்தக் குளங்களை ஆழப்படுத்த வேண்டியதில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குளங்களில் இருக்கிற ஆக்கிரமிப்புகள் எல்லாம் கடந்த 2, 3 மாதங்களுக்கு முன்பு சுத்தமாக அகற்றப்பட்டு விட்டது. இப்போதும் கடந்த மாதம் பெய்த மழையின் காரணமாக அதிக நீர் வரத்து வந்து இப்போது தண்ணீர் பிரச்சினையை - குடிநீர் பிரச்சினையை தீர்த்து இருக்கிறது. மீண்டும் அந்த குளங்களை ஆழப்படுத்துகிறபோது நிச்சயமாக கோவை மாநகரப் பகுதியிலே குடிநீர்ப்பிரச்சினை என்பதே எப்போதும் வராது என்பதற்காகவும் அந்த சுற்று வட்டாரங்களில் இருக்கிற கிராமங்களில் உள்ள விவசாயிகள், குளங்களில் நீர் வரத்து அதிகரிக்கிற போது பயன்பெறும் விதத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயம் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த பெரிய குளம், குறிஞ்சி குளம் ஆகியவற்றை ஆழப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே நம்முடைய மானியக் கோரிக்கையிலே தெரிவித்ததைப்போல தமிழ்நாடு முழுவதும் இருக்கிற குளங்களை ஆழப்படுத்துவதற்கு பல கோடி ரூபாய் செலவிலே திட்டங்கள் போட வேண்டியிருக்கிறது என்று சொல்லி அதற்காக மைய அரசுக்கு ஒரு கருத்துரு அனுப்பப்பட்டு பல நிலைகளிலே அது ஆய்விலே இருக்கிறது. பொதுவாக இன்றைக்கு பொதுப்பணித் துறையைப் பொறுத்த மட்டிலே பெரிய குளங்களை சீரமைப்பதற்கு போதிய நிதி ஆதாரங்கள் திரட்டவேண்டியிருக்கிறது. வெளிநாடுகளிடமிருந்தும் உலக வங்கியிடமிருந்தும் தான் நாம் உதவி பெற வேண்டியிருக்கிறது. நம்மிடத்திலே நிதி ஆதாரம் குறைவாக இருக்கிற காரணத்தாலே தான் முன்உரிமைகள் அடிப்படையிலே பிரையாரிட்டி பேசிஸ்லே சில வேலைகளை நாம் செய்து வருகிறோம். அந்த அடிப்படையிலே தான் இன்றைக்கு அனைத்து குளங்களையும் எடுக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அது குறித்து அவசியம் இருக்குமானால் அரசு நிதிநிலைமைக்கு ஏற்ப பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. பி. ராஜு.

[*1994 ஏப்ரல் 29*

திரு. கே. பி. ராஜு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிச்சி குளம் என்பது கோவை நகருக்கு அருகாமையிலே இருக்கிற பேரூர் பகுதியிலே இருக்கிறது. இது 342 ஏக்கர் நிலப்பரப்புள்ள குளம். இதுபோன்ற குளங்கள் கரிகால் சோழன் காலத்திலே கட்டிய குளங்கள். அந்த குளங்களில் தண்ணீர் வந்து தேங்கி நின்றால் அங்கேயிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு நிலத்தடி நீர் உயரும். ஆகவே இதற்கு முன்பிருந்த அரசுகளில் இந்தக் குளங்களில் தண்ணீர் வருவதை சிலர் தடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் நமது ஆட்சி வந்தவுடன் நமது அமைச்சரிடம் சொல்லி அந்தக் குளத்திலே தண்ணீர் நிரப்புங்கள் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர் உத்தரவிட்டு தண்ணீரை நிரப்பினார்கள். அந்தக் குறிச்சி குளம் நிறைந்ததன் காரணமாக 30 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு இன்னும் குடிநீர் பிரச்சினை இல்லாமல் இருக்கிறது. நீர்நிலை உயர்ந்துள்ளது புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக்காலத்திலே. ஆகவே அந்தக் கரைகளை உயர்த்துவதன்மூலம் தூர் வாருவதன் மூலம், ஆழ படுத்துவதன்மூலம் தண்ணீர் தேங்கி நின்றால் இன்னும் விவசாயிகள் பயனடைவார்கள். ஆகவே இந்த ஆண்டாவது அரசு இதை பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இந்த குறிச்சி குளத்தை நான் கோவைக்கு சென்றிருந்தபோது நேரிலேயே பார்வையிட்டேன். அதை ஆழப்படுத்த வேண்டும் என்பதில் அரசுக்கு 2 கருத்துக்கள் கிடையாது. ஆனால் இருக்கிற நிதி ஆதாரங்களை பொறுத்துத்தான் - ஏனென்றால் இதைவிட மோசமாக இருக்கிற குளங்கள் எல்லாம் நிறைய தமிழ்நாட்டிலே இருக்கின்றபோது அவைகளுக்கு முன்னுரிமை கொடுத்து நாம் செய்துக் கொண்டு வருகிறோம். ஐரோப்பிய பொருளாதார திட்டத்தின் கீழேயும், பல்வேறு திட்டங்களின் கீழேயும் நாம் செய்து வருகிறோம். ஆகவே நான் ஏற்கெனவே சொன்னதைப் போல - இந்தக் குளத்தினால் பயன் இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. அந்தப்பகுதியிலே நிலத்தடி நீர் உயரும், குடிநீர் பிரச்சினை தீரும். கிணறுகளிலேயெல்லாம் ஊற்று சுரக்கும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இருக்கிற நிதி ஆதாரத்தைப் பொறுத்துத்தான் செய்யப்படும் என்று ஏற்கெனவே தெரிவித்தேன். ஆகவே இந்த ஆண்டில் முடியாது. வருகின்ற நிதி ஆண்டுகளிலே நிதி ஆதாரத்திற்குத் தகுந்தவாறு அதைப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 448, டாக்டர் க. கோபால், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.